# நடப்பு நிகழ்வுகள்- மே 02 - 2017

- முதல் முறையாக **“தேசிய கங்கை நதி தூய்மைப்படுத்துவதற்கான உறுதிமொழி தினம்”** (Ganga Cleanliness Pledge Day) மே 2 அன்று தேசிய தூய்மை கங்கை திட்டம் (National Mission for Clean Ganga (NMCG)) எனும் அமைப்பின் மூலம் அனுசரிக்கப்படுகிறது.

- புதுசிசேரியில் நடைபெற்ற தென் மண்டல **சீனியர் வாலிபால்** போட்டியின் **ஆடவர்** பிரிவில் **தமிழகமும் ,** **மகளிர்** பிரிவில் **கர்நாடகமும் சாம்பியன் பட்டம்** வென்றனர்.

- நடப்பு ஏப்ரல் மாத்தில் 16 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு சென்னை மீனம்பாக்கத்தில் சுமார் 14 நாட்களுக்கு வெப்ப நிலை 40 டிகிரி செல்சியஸ்கு மேல் பதிவாகியுள்ளது. இந்திய வானிலை மையம் இதனை **அதிவெப்பநாட்கள்** என்று அழைக்கிறது.

- நெதர்லாந்து நாட்டின் Assen நகரில் நடைபெற்ற **சூப்பர் பைக் பந்தய**த்தில் **பிரிட்டன் வீரர் Jonathan Rea** 59 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

- லண்டன் நகரில் உள்ள Wembley அரங்கில் WBA மற்றும் IBO **world heavy weight** போட்டி நடைபெற்றது இதில் இங்கிலாந்து வீரர் **அந்தோனி ஜோஸ்வா** (Anthony Joshua) சாம்பியன் பட்டம் வென்றார்.

- **பார்சிலோனியா ஓபன் டென்னிஸ் போட்டியில்** ஆஸ்திரேலிய வீரர் டொமினிக் தீமை (Dominc Thiem) ஐ தோற்கடித்து **ஸ்பெயின் வீரர் ரபேல் நாடல்** 10 வது முறையாக **சாம்பியன் பட்டம்** வென்றுள்ளார்.

- **துருக்கி அதிபர் ரீசிப் தாயீப் எர்டோகன்** இந்தியாவிற்கு வருகை புரிந்ததை முன்னிட்டு இரு நாடுகளிடையே வர்த்தக தொழில் உறவுகளை மேம்படுத்த உறுதி மேற்கொள்ளப்பட்டது அப்போது தொலைத்தொடர்புத் துறை ஒப்பந்தம் உள்பட 3 ஒப்பந்தங்கள் இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டது.

- **சீனா**வில் உள்ள **சென்யாங்** நகரில் உலக போர் ஆரம்பமாகலாம் என அந்நாட்டு மக்களை எச்சரிக்கும் வகையில் அபாய சங்கு தொடர்ந்து ஊதப்பட்டு வருகிறது.

- சர்வதேச சந்தையில் **இந்திய சாக்லேட் சந்தை வளர்ந்து வருவதாக** லண்டனைச் சேர்ந்த **மின்டெல் நிறுவனம்** இந்த தகவலை வெளியிட்டுள்ளது. **மிட்டாய் வகைகளிலும்** வளர்ந்த நாட்டைக்காட்டிலும் இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் விற்பனை நன்றாக இருப்பதாக மின்டெல் தெரிவித்துள்ளது.

- **வருங்கால வைப்பு நிதியில்** வைக்கப்படும் சேமிப்பு தொகையை **அவசர கால மருத்துவ செலவுக்கு** பயன்படுத்திக் கொள்ள முடியும் என பி.எப் ஆணையர் **வி.பி.ஜாய்** தெரிவித்துள்ளார்.

- தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வருகிற கல்வி ஆண்டு முதல் அனைத்து பள்ளிகளிலும் **யோகா பயிற்சி அமல்** ஆகிறது என்றும் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

- சென்னையில் நடைபெற்ற **ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி**யின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **ஜோஷ்னா,** தீபிகா பலிக்கலைத் தோற்கடித்து **சாம்பியன் பட்டம்** வென்றார்.

- உலக சாதனை நிகழச்சிக்காக தமிழகம் முழுவதிலிருந்தும் 440 பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சி சென்னையில் மே 1 ம் தேதி நடைபெற்றது. இந்த நிகழச்சியில் பள்ளி கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன், அருங்காட்சியகங்கள் மற்றும் கலாச்சார இயக்குனர் டி.ஜெகநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

- காஷ்மீரில் நிலைமை சரியில்லை என கூறி **ஆனந்த்நாக் பாராளுமன்ற தொகுதி** இடைத்தேர்தலை தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது.